www.Padasalai.Net www.TrbTnps.com

11ஆம் வகுப்பு

கணக்குப்பதிவியல்

www.Padasalai.Net

தொகுதி - 1

<u>வாழ்த்துகளுடன்......</u>

மு.காதர், எம்.காம்., பி.எட்., எம்.பில்.,
முதுகலை வணிகவியல் ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி
பிரம்மகுண்டம்
விழுப்புரம் மாவட்டம்
அலைபேசி: 94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

www.Padasalai.Net www.TrbTnps.com

பொருளடக்கம்

வ. எண்	அலகு	பக்க எண்
1.	கணக்கியல் அறிமுகம்	1
2.	கணக்கியலின் கருத்துக் கட்டமைப்பு	6
3.	முதன்மைப் பதிவேடுகள்	9
4.	பேரேடு	15
5.	இருப்பாய்வு	20
6.	துணை ஏடுகள் - 1	24
7.	துணை ஏடுகள் - 2	29
8.	வங்கிச் சரிகட்டும் பட்டியல்	34

www.Padasalai.Net

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

www.Padasalai.Net www.TrbTnps.com

அலகு 1

கணக்கியல் அறிமுகம்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் (1 மதிப்பெண்)

1. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது

(அ) சமூகக் கணக்கியல் ***(ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்***

(இ) மேலாண்மைக் கணக்கியல் (ஈ) பொறுப்பு கணக்கியல்

2. பின்வருவனவற்றுள் எது கணக்கியலின் முதன்மை நோக்கம் ஆகாது

(அ) நடவடிக்கைகளை முறையாகப் பதிவு செய்தல்

(ஆ) வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறனை அறிந்து கொள்ளுதல்

(இ) நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ளுதல்

(ஈ) வரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரித்தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்

3. பின்வருவனவற்றில் எது கணக்கியலின் பிரிவுகளில் இடம்பெறாது.

(அ) நிதிநிலைக் கணக்கியல் (ஆ) மேலாண்மைக் கணக்கியல்

(இ) மனிதவளக் கணக்கியல் ***(ஈ) மேற்கண்ட ஏதுமில்லை***

4. ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது

(அ) குறிப்பேடு (ஆ) இருப்பாய்வு

(இ) இருப்பு நிலைக் குறிப்பு (ஈ) பேரேடு

5. நிதித்தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?

(அ) கடனீந்தோர் ***(ஆ) பணியாளர்***

(இ) வாடிக்கையாளர் (ஈ) அரசு

II.மிகக் குறுகிய வினாக்கள் (2 மதிப்பெண்)

1. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு?

கணக்கியல் என்பது பொருளாதார தகவல்களை கண்டறிந்து அளவிட்டு, தகவல் தெரிவிக்கக் கூடிய ஒரு செயல்பாடாகும்.

இதன் மூலம் தகவல்களை பயன்படுத்துவோர் தக்க தீர்வு காண்பதற்கும் மற்றும் முடிவு எடுப்பதற்கும் வகை செய்கிறது. ***- அமெரிக்க கணக்கியல் கழகம்***

2. கணக்கியலின் ஏதேனும் இரண்டு பணிகளைக் கூறுக? (ஏதேனும் 2 மட்டும்)

1.அளவிடுதல்

நிறுவனத்தின் செயல்திறனை அளவிட கணக்கியல் ஒரு கருவியாக செயல்படுகிறது.

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

2.முன்னறிதல்

வணிக நிறுவனங்களின் எதிர்காலத்திறன் மற்றும் நிதி நிலைப்பற்றி கணக்கியலின் பல்வேறு கருவிகள் மூலம் முன்கூட்டி அறிய முடிகிறது.

3.ஒப்பிடுதல்

நிகழ்ந்த செயல்திறனுடன், திட்டமிட்ட செயல்திறனை ஒப்பிட உதவுகிறது.

4.முடிவெடுத்தல்

பொருட்களின் அடக்கவிலை, விற்பனை விலை மற்றும் நிறுவன செயல்திறன் போன்றவை பற்றி எளிதாக முடிவெடுக்க முடிகின்றது.

5.கட்டுப்பாடு

கணக்கியல் ஒரு கட்டுப்பாட்டுக் கருவியாக இருப்பதால், கையாண்ட பல்வேறு வழிமுறைகள் குறித்த பலம் மற்றும் பலவீனங்களைக் கண்டறிந்து, கருத்து தெரிவிக்க முடிகிறது.

3. கணக்கியல் செயல்பாட்டிலுள்ள படிநிலைகள் யாவை?

- நடவடிக்கைகளை இனம் கட்டு குறிப்பேட்டில் பதிவு செய்தல்
- எடுத்தெழுதல் மற்றும் இருப்பு கட்டுதல்
- இருப்பாய்வு தயாரித்தல்
- வியாபார கணக்கு தயாரித்தல்
- இலாபநட்ட கணக்கு தயாரித்தல்
- இருப்பு நிலை குறிப்பு தயாரிதல்

www.Padasalai.Net

4. கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய நபர்கள் யாவர்?

கணக்கியலின் அடிப்படை நோக்கமே நிறுவனத்தின் உள்ளேயும் வெளியேயும் உள்ள தனிநபர் மற்றும் குழுவிற்கு கணக்கியல் தகவல்களை பயன்படும்படி அளிப்பதாகும்.

அகப்பயனீட்டாளர்கள்

1. உரிமையாளர்கள் 2. மேலாண்மைநிர்வாகம் 3. பணியாளர்கள்

புறபயனீட்டாளர்கள்

1. முதலீட்டாளர்கள் 2. கடனீந்தோர் மற்றும் நிதி நிறுவனங்கள் 3. வாடிக்கையாளர்கள்
4. வரிகள் மற்றும் ஒழுங்கு முறை அமைப்புகள் 5. அரசு 6. ஆராய்ச்சியாளர்கள்
7. பொதுமக்கள்

5. கணக்கியல் தகவல்களை பதிவு செய்யும் எவையேனும் இரண்டு அடிப்படைகளின் பெயர்களைத் தருக?

1. ரொக்க அடிப்படை
2. நிகழ்வு அல்லது வணிக அடிப்படை
3. கலப்பு அல்லது கலப்பின அடிப்படை

III.குறுகிய வினாக்கள் (3 மதிப்பெண்)

1. கணக்கியலின் பொருளை விளக்குக?

கணக்கியல் என்பது நிதியியல் தகவல்களை, இனம்காணுதல், அளவிடுதல், பதிவுசெய்தல் வகைப்படுத்துதல், சுருக்கமுணர்தல், உய்த்துணர்தல் மற்றும் தகவல்களைத் தெரிவித்தல் போன்ற முறையான செயல்பாடுகளை உள்ளடக்கியது. கணக்கியல் கீழ்க்கண்ட தகவல்களைத் தருகிறது:

(1) பெற்றிருக்கக்கூடிய வளங்கள்

(2) பெற்றிருக்கக்கூடிய வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன, மற்றும்

(3) அவற்றின் பயன்பாட்டினால் ஏற்படும் விளைவுகள்.

2. கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக கூறுக?

1. நிதிநிலை கணக்கியல்

இது நிதியில நடவடிக்கைகளையும் நிகழ்வுகளையும் பதியக்கூடியது ஆகும்.

2. அடக்க விலை கணக்கியல்

பொருட்கள் அல்லது சேவைகளின் அடக்க விலையை கணக்கிட உதவுகிறது.

3. மேலாண்மை கணக்கியில்

கணக்கியல் தகவல்களை நிர்வாகத்திற்கு தருவதன் மூலம் முடிவெடுப்பதற்கும் நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகளுக்கும் துணை செய்வது மேலாண்மை கணக்கியல் ஆகும்.

4. சமூக பொறுப்பு கணக்கியல்

இது வணிக நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவங்கள் கணக்கியல் தகவல்களை சமூகத்தின் பார்வையில் வழங்குவது ஆகும்.

5. மனித வள கணக்கியல்

இது ஒரு நிறுவனம் அதன் மனித வளத்தில் செய்த முதலீடுகளை இனம் காணுதல், அளவிடுதல், மற்றும் அறிவித்தல் ஆகியவற்றை குறிக்கும்.

3. கணக்கியலின் முக்கியத்துவத்தினை விரிவாக விளக்குக?

அனைத்து நிறுவனங்களின் அடிப்படை தேவையாக விளங்குகிறது. கணக்கியலின் முக்கியத்துவம் பின்வருமாறு.

1. முறையான பதிவேடுகள்

ஒரு நிறுவனத்தின் அனைத்து நிதிசார்ந்த நடவடிக்கைகளும் கண்கேடுகளில் முறையாக பதிப்படுகின்றன.

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

2. நிதிநிலை அறிக்கைகள் தயாரித்தல்

வியாபார இலாபநட்டக்கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பு போன்ற நிதிநிலை அறிக்கைகளை கால முறை தோறும் தயாரிப்பதன் மூலம் வணிகத்தின் இயக்க முடிவுகளையும், நிதிநிலையையும் அறிய முடியும்.

3. வளர்ச்சியை மதிப்பிடல்

நிதிசார் விவரங்களை பகுப்பாய்வு மற்றும் உயத்துணர்வு செய்வதன் மூலமாக பல்வேறு செயல்களின் வளர்ச்சியை மதிப்பிடவும் பலவீனங்களைக் கண்டறியவும் இயலும்.

4. முடிவெடுக்க உதவுதல்

ஒரு நிறுவனத்தின் நிர்வாகம் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு தக்க முடிவுகளை எடுக்கத் தேவையான உரிய தகவல்களை கணக்கியல் அளிக்கிறது.

5. சட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்

சட்டப் பூர்வத் தேவைகளான பணியாளர் வருங்கால வைப்பு நிதி, பராமரிப்பு, வருமான வரிப்பிடித்தம் மற்றும் வரி அறிக்கைகள் தாக்கல் செய்தல் போன்றவை கணக்கியல் மூலம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படுகின்றன.

6. பயனீட்டாளர்களுக்கு தகவல் தருதல்

உரிமையாளர்கள், நிர்வாகம், கடனீந்தோர், நிதி நிறுவனங்கள் போன்ற பல பயனீட்டாளர்களுக்கு கணக்கியல் தகவல்களைத் தருகிறது.

www.Padasalai.Net

7. சட்டச் சான்றாக இருத்தல்

பொதுவாக நிதிமன்ற வழக்குகளிலும் இதர ஆணையங்களிலும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண கணக்கேட்டுப் பதிவுகள் சான்றாக ஏற்கப்படுகின்றன.

8. வரி கணக்கிடுதல்

வருமான வரி மற்றும் இதர வரிகள் கணக்கிடுதல் மற்றும் செலுத்தலில் கணக்கேடுகள் அடிப்படை ஆதாரமாக இருக்கின்றன.

9. இணைப்பின் போது தீர்வு செய்தல்

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வணிக நிறுவனங்களை இணைக்கும் போது, செலுத்த ஈடுசெய்ய தொகையை முடிவு செய்வதற்கும் தேவையான தகவல்களைக் கணக்கேடுகள் அளிக்கின்றன.

4. கணக்கியல் தகவல்களில் பின்வரும் பயனீட்டாளர்கள் ஏன் ஆர்வமாக உள்ளனர்?

(அ) முதலீட்டாளர்கள் (ஆ) அரசு

அ. முதலீட்டாளர்கள்

- முதலீட்டு முடிவுகளை எடுப்பதற்கு
- நிறுவனத்தின் எதிர்கால இலாபம், இடர் ஏற்கும் திறன் போன்றவற்றை அறிய

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

ஆ. அரசு

- வணிகம் மற்றும் தொழில் துறை சார்ந்த கொள்கை முடிவுகள் உருவாக்க மற்றும் எடுக்க
- அரிதான வளங்களை ஒதுக்கீடு செய்ய
- சில பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்ய

5. நவீன வணிக உலகில் கணக்காளரின் பங்களிப்பு பற்றி விளக்குக?

1. ஏடுகளை பராமரிப்பவர்

நிதி சார்ந்த நடவடிக்கைகளை முறையாக பதிவு செய்து ஏடுகளை பராமரிக்கிறார்

2. நிர்வாகத்திற்கு தகவல் தருபவர்

நிர்வாகத்திற்கு தேவையான நிதி சார்ந்த தவல்களை கணக்காளர் அளித்து உதவுகிறார்

3. வணிக சொத்துகளின் காப்பாளர்

சொத்துகளுக்கான பதிவேடுகளை பதிவு செய்து பராமரிப்பதன் மூலம் வணிக சொத்துகளின் காப்பாளாராக செயல்படுகிறார்

4. நிதி ஆலோசகர்

நிதி சார்ந்த தகவல்களை பகுப்பாய்வு செய்து அலோசனைகளை முதலீட்டாளர்களுக்கு வழங்குவதன் மூலம் நிதி ஆலோசகராக செயல்படுகிறார்

5. வரி மேலாளர்

கணக்காளர் குறித்த காலத்தில் வருமான வரி விவரம் தயாரிப்பு செய்தல், தாக்கல் செய்தல் மற்றும் வருமான வரி செலுத்துதல் முதலியவற்றை உறுதி செய்கிறார்

6. பொது தொடர்பு அலுவலர்

கணக்காளர், தேவைப்படும் பயனீட்டாளர்களுக்கு கணக்கியல் பகுப்பாய்வு செய்ய தேவைப்படும் விவரங்களை வழங்குகிறார்

www.Padasalai.Net

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

அலகு 2

கணக்கியலின் கருத்துக் கட்டமைப்பு

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் (1 மதிப்பெண்)

1. வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு, வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதை கூறும் கருத்து

(அ) பண மதிப்பீட்டுக் கருத்து (ஆ) அடக்கவிலை கருத்து

(இ) வணிகத்தனித்தன்மை கருத்து (ஈ) இரட்டைத்தன்மை கருத்து

2. வணிகம் நீண்டகாலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது

(அ) வணிக தனித்தன்மை கருத்து ***(ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து***

(இ) கணக்கியல் கால அனுமானம் (ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை

3. GAAP என்பது:

(அ) பொதுவாக ஏற்றுக் கொள்ளடப்பட்ட கணக்கியல் கொள்கைகள்

(ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்

(இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்

(ஈ) இவற்றுள் ஏதுமில்லை

4. இறுதி சரக்கிருப்பு, அடக்க விலை அல்லது விற்று ஈட்டக்கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதனடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் கோட்பாடு

(அ) முக்கியத்துவ மரபு (ஆ) பண மதிப்பீட்டுக் கருத்து

(இ) முன்னெச்சரிக்கை மரபு (ஈ) நிகழ்வு தீர்வு கருத்து

5, இந்தியாவில், கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு

(அ) இந்திய மைய வங்கி

(ஆ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்

(இ) உச்ச நீதி மன்றம்

(ஈ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்

II.மிகக் குறுகிய வினாக்கள் (2 மதிப்பெண்)

1. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு?

கணக்கேடுகள் பராமரிப்பு என்பது வணிக நடவடிக்கைகளை ஏடுகளில் பதிவு செய்யும் ஒரு கலை ஆகும் **- ஜெ. ஆர்.பேட்லிபாய்**

2. கணக்கியல் கருத்துக்கள் என்றால் என்ன?

> கணக்கியல் கருத்துகள் என்பது பரந்த ஒருமித்த கருத்துகளின் விளைவாகும்.

> பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எண்ணம் அல்லது சாராம்சம் கருத்து எனப் பொருள்படும்.

3. வருவாய் தீர்வு கருத்து பற்றி சுருக்கமாக விவரிக்க?

ஒரு சொத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் அச்சொத்துகள் வணிகத்தால் தீர்வு செய்யப்படும் போது மட்டுமே பதிவு செய்யப்படும். இதுவே வருவாய் தீர்வு கருத்தாகும்

4. கணக்கியலில் முழு வெளியிட்டு கொள்கை என்றால் என்ன?

கணக்குகள் நேர்மையாக தயாரிக்கப்பட வேண்டும்.

அனைத்து முக்கிய தகவல்களும் நிதிநிலை அறிக்கை மூலமாக வெளிப்படுத்த வேண்டும்.

5. நிறுவன தொடர்ச்சி அனுமானம் குறித்து சிறு குறிப்பு வரைக?

ஒரு வாணிக நிறுவனம் நீண்ட காலம் தொடர்ந்து நடைபெற்று இலாபம் ஈட்டும் என்ற எதிர்பார்ப்பில் நடத்தப்படுகிறது

இக்கண்ணோட்டத்திலேயே நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன்

III.குறுகிய வினாக்கள் (3 மதிப்பெண்)

1. பெருத்துகை கருத்து என்றால் என்ன? ஏன் ஒரு வணிக அமைப்பு இக்கருத்தைப் பின்பற்ற வேண்டும்?

www.Padasalai.Net

பொருத்துகை கருத்து பொருள்:

ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ஈட்டிய வருவாய், அவ்வருவாயை ஈட்டிய அவ்வாண்டில் செய்த செலவுகளோடு ஒப்பிடுவது பொருத்துகை கருத்து ஆகும்.

இது நிகழ்வு தீர்வு கருத்து மற்றும் கணக்கியல் கால கருத்தினை அடிப்படையாக கொண்டவையாகும்

பின்பற்றுவதற்கான காரணங்கள்:

- நிறுவனத்தின் உண்மையான இலாபம் அல்லது நட்டத்தினை அறிய.
- நிறுவனத்தின் எதிர்கால திட்டமிடலுக்கு

2. பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும்'- விவரி?

பணமதிப்பீட்டு கருத்தின் படி எந்த நடவடிக்கைகளை பணத்தால் அளவிட முடியுமோ அந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்குகளில் பதிவு செய்யப்படும்.

கணக்கியலின் அளவிட்டு அலகாக ஒரு நாட்டின் நாணயம் அமைகிறது.

பணம் சாராத நடவடிக்கைகள் கணக்கேடுகளில் பதியப்படுவதில்லை.

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

3. 'ஒரு வணிக நிறுவனம் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்' இந்த வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்கியல் கருத்தை விளக்குக?

ஒரு வாணிக நிறுவனம் நீண்ட காலம் தொடர்ந்து நடைபெற்று இலாபம் ஈட்டும் என்ற எதிர்பார்ப்பில் நடத்தப்படுகிறது

இக்கண்ணோட்டத்திலேயே நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன

எதிர்காலத்தில் நிறுவனம் கலைக்கப்படும் என்ற தேவை எழுவதில்லை

4, கணக்கியல் தரநிலைகள் குறித்து சிறு குறிப்பு வரைக.

பொதுக் கணக்காளர் மற்றும் கணக்காளர்களின் நலனுக்காக வழங்கும் சட்டம் மற்றும் தொழில்சார் அமைப்புகளால் பொதுவாக உருவாக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளே கணக்கியல் தரநிலைகளாகும். **- கோஹ்லர்**

இரண்டு விதமான தர நிலைகள் உள்ளன

1, பன்னாட்டு நிதி அறிக்கை தரநிலைகள்

பன்னாட்டு நிதி அறிக்கை தரநிலைகள் பன்னாட்டு தரநிலை வாரியத்தால் வழங்கப் படுவதாகும்

2. இந்தியாவின் கணக்கியல் தர நிலைகள்

இந்தியாவின் கணக்கியல் தர நிலைகள் இந்திய பட்டய கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடுப்படுகிறது

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnps.com

அலகு 3

முதன்மை பதிவேடுகள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் (1 மதிப்பெண்)

1. கணக்கியல் சமன்பாடு குறிப்பது

(அ) வியாபாரத்தின் முதல், சொத்திற்கு சமமானது

(ஆ) வியாபாரத்தின் பொறுப்புகள், சொத்திற்கு சமமானது

(இ) வியாபாரத்தின் முதல், பொறுப்புகளுக்கு சமமானது

(ஈ) வியாபாரத்தின் சொத்துகள், முதல் மற்றும் பொறுப்புகளுக்கு சமமானது

2. சொந்த பயன்பாட்டிற்காக உரிமையாளரால் வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகையால் ஏற்படும் நிலை.

(அ) சொத்தின் மதிப்பு குறையும், உரிமையாளரின் முதலின் மதிப்பு குறையும்

(ஆ) ஒரு சொத்தின் மதிப்பு உயரும், மற்றொரு சொத்தின் மதிப்பு குறையும்

(இ) ஒரு சொத்தின் மதிப்பு உயரும், பொறுப்புகளின் மதிப்பு உயரும்

(ஈ) சொத்தின் மதிப்பு உயரும், முதலின் மதிப்பு குறையும்

3. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ரூ.1,00,000/- மற்றும் அதன் வெளியாட் - களுடனான பொறுப்புகள் ரூ.60,000/- எனில், அந்நிறுவனத்தில் முதல்

(அ) ரூ.1,60,000 (ஆ)) ரூ.60,000 ***(இ) ரூ.1,00,000*** (ஈ)) ரூ.40,000

www.Padasalai.Net

4. கணக்கியல் சமன்பட்டின்படி சரியாக இல்லாதது.

(அ) சொத்துக்கள் = பொறுப்புகள் + முதல் (ஆ) சொத்துக்கள் = முதல் + பொறுப்புகள்

(இ) பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல் (ஈ) முதல் = சொத்துக்கள் பொறுப்புகள்

5. கணக்கியல் சமன்பாடு, எந்த கணக்கியல் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது?

(அ) இரட்டைத் தன்மை (ஆ) நிலைத்தன்மை

(இ) நிறுவனத் தொடர்ச்சி (ஈ) நிகழ்வுத்தன்மை

6. சொத்து கணக்கு கையாள்வது

(அ) தனிப்பட்ட நபர்கள் (ஆ) செலவுகள் மற்றும் இழப்புகள்

(இ) சொத்துகள் (ஈ) வருமானம் மற்றும் இலாபங்கள்

7. பின்வருனவற்றில் பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு எது?

(அ) கட்டடம் கணக்கு ***(ஆ) கொடுபட வேண்டிய சம்பள கணக்கு***

(இ) மகேஷ் கணக்கு (ஈ) பாலன் நிறுவனம்

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

8. முன் கூட்டிச் செலுத்திய வாடகை ஒரு

(அ) பெயரளவு கணக்கு (ஆ) ஆள்சார் கணக்கு

(இ) சொத்துக் கணக்கு ***(ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு***

9. உரிமையாளரால், வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகை வரவு வைக்கப்படும் கணக்கு

(அ) எடுப்புகள் கணக்கு ***(ஆ) ரொக்கக் கணக்கு***

(இ) முதல் கணக்கு (ஈ) கொள்முதல் கணக்கு

10. இரட்டைப் பதிவு முறையில் கணக்குகளைப் பதிவு செய்யும் போது நடவடிக்கைகள் பாதிப்பது

(அ) குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள் (ஆ) ஒரே கணக்கில், வெவ்வேறு தேதிகளில்

(இ) ஒரே கணக்கின் இரு பக்கங்களில் (ஈ) குறைந்த பட்சம் மூன்று கணக்குகள்

II.மிகக் குறுகிய வினாக்கள் (2 மதிப்பெண்)

1. ஆதார ஆவணங்கள் என்றால் என்ன?

நிதி சார்ந்த நடவடிக்கைகளின் உண்மையான சான்றுகளை வெளிப்படுத்தும் ஆவணங்கள் ஆதார ஆவணங்கள் ஆகும்.

ரொக்கச்சீட்டு, இடாப்பு, பற்றுக்குறிப்பு, வரவுக்குறிப்பு, செலுத்துச்சீட்டு, சம்பளப்பட்டியல், கூலிப்பட்டியல் காசோலைப் பதிவுப் பட்டியல் போன்றவை ஆதார ஆவணங்களில் உள்ளடங்கும்.

www.Padasalai.Net

2. கணக்கியல் சமன்பாடு என்றால் என்ன?

நிறுவனத்தின் சொத்துகள் மற்றும் பொறுப்புகள், முதல் ஆகியவற்றிற்கு இடையே உள்ள தொடர்பினை சமன்பாட்டு முறையில் வெளிப்படுத்துவது கணக்கியில் சமன்பாடு ஆகும்

3. பின்வருனவற்றிக்கான ஏதேனும் ஒரு நடவடிக்கையைத் தருக?

(அ) சொத்துக்கள் குறைதல் மற்றும் பொறுப்புகள் குறைதல்.

கடனீந்தோருக்கு செலுத்தியது ரூ 5,000

(ஆ) ஒரு சொத்து அதிகரித்தல் மற்றும் மற்றொரு சொத்து குறைதல்.

ரூ 5,000 மதிப்புள்ள இயந்திரம் வாங்கியது

4. குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்பதன் பொருள் என்ன?

குறிப்பேட்டு நடவடிக்கைகளை பதிவு செய்யும் முறையினை குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்கிறோம். இதில் வணிக நடவடிக்கைகள் நாள் வரிசையில் பதிவு செய்யப்படுகின்றன.

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

5. சொத்து கணக்கு என்றால் என்ன?

பணமதிப்புடைய எந்த ஒரு இயற்பொருள் அல்லது உரிமை சொத்து ஆகும்

சொத்துகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு தனித்தனியாக காட்டப்படுகின்றன.

சொத்துகள் இரண்டு கணக்குகளாக பிரிக்கப்படுகின்றன, அவை

1. புலனாகும் சொத்து கணக்கு: எ.கா. : நிலம், கட்டிடம்

2. புலனாகா சொத்து கணக்கு: எ.கா. : நற்பெயர், காப்புரிமை

6. ஆள்சார் கணக்குகள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?

1. தனிநபர் கணக்கு, 2. சட்டமுறை ஆள்சார் கணக்கு, 3. பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு என ***மூன்று*** வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

7. பெயரளவு கணக்கிற்கான கணக்கியல் விதியைக் கூறுக?

செலவுகளும் நட்டங்களும் பற்று வை.

வருமானங்களும் ஆதாயங்களும் வரவு வை

8. இரட்டைப் பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக?

1. ஆள்சார் கணக்கு

> பெருபவர் கணக்கை பற்று வை

> தருபவர் கணக்கை வரவு வை

2 சொத்துக்கணக்கு

> உள்வருவனவற்றை பற்று வை

> வெளிச்செல்வனவற்றை வரவு வை

3. பெயரளவு கணக்கு

> செலவுகளையும் நட்டங்களையும் பற்று வை

> வருமானங்ளையும் ஆதாயங்ளையும் வரவு வை

www.Padasalai.Net

III.<u>குறுகிய வினாக்கள் (3 மதிப்பெண்)</u>

1. கணக்கியல் சமன்பாட்டு முறையில் கணக்குகளை பதிவு செய்யும் முறையியை கருக்கமாக விளக்குக.

அ. முதல் அதிகரிக்கும் போது, சொத்து அதிகரித்தல்

முருகன் ரூ.50,000/- முதல் போட்டு தொழில் தொடங்கினார்.

விளைவுகள்:

ரொக்கம் உள்வருதல் - சொத்தின் மதிப்பு அதிகரிப்பு

முதல் போடப்பட்டது. - முதல் அதிகரிப்பு

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

சொத்துக்கள் = முதல் + பொறுப்புகள்

(ரொக்கம்) 50,000/ = 50,000 (முதல்) + பொறுப்புகள்

50,000/ = 50,000/

ஆ. பொறுப்புகள் குறையும் போது, சொத்துக்களும் குறைதல்

கடனீந்தோருக்கு திருப்பிச் செலுத்திய தொகை ரூ.10,000/-

விளைவுகள்:

ரொக்கம் வெளிச் செல்லுதல் - சொத்தின் மதிப்பு குறைதல்

கடனீந்தோர் பணம் பெறுதல் - பொறுப்பின் மதிப்பு குறைதல்

முதல் + பொறுப்புகள் = சொத்துக்கள்

(முதல்) + (-10,000/) -(கடனீந்தோர்) = (-10,000/) (ரொக்கம்)

(- 10,000/) = (- 10,000/)

2. கணக்கு என்றால் என்ன? கணக்குகளை வகைப்படுத்தி, தகுந்த உதாரணங்களுடன் கூறுக.

கணக்கு என்பது கணக்கியியலில் அடையாளம் காண உதவும் ஒரு அடிப்படை அலகாகும்.

கணக்குகள் மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது

1. ஆள்சார் கணக்கு

> முதல், இந்தியன் வங்கி , ராம் நிறுவனம், சந்துரு

2. சொத்துக் கணக்கு

> கட்டிடம், இயந்திரம், ரொக்கம், வங்கி இருப்பு

3. பெயரளவு கணக்கு

> வாடகை , சம்பளம், கூலி

3. ஆள்சார் கணக்கின் மூன்று வகைகளைக் கூறுக.

> தனிநபர் கணக்கு: - இது மனிதர்கள் சார்ந்த கணக்கு

> சட்டமுறை கணக்கு: - இது ஆட்களின் குழு அல்லது அமைப்பு அல்லது சங்கம் சார்புடைய கணக்கு

> பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு: - இது இயற்கை அல்லது. உருவாக்கப்படும் செயற்கை நபர்கள் சார்ந்த கணக்கு. செயற்கை தன்மையுடைய நபரையே அல்லது குழுவையோ குறிக்கிறது.

4. உரிமையாளர் ஆயுள்மீது செலுத்தப்பட்ட காப்பீட்டு முனைமம், கணக்கியலில் எவ்வாறு பதியப்படுகிறது?

> உரிமையாளர் ஆயுள் மீது செலுத்தப்பட்ட காப்பீட்டு முனைமம், கணக்கியலில் எடுப்பாக கருதப்படுகிறது. எனவே எடுப்பு கணக்கு பற்று வைக்கப்படும்.

> காரணம் தனி வணிகத்தில் உரிமையாளரும், நிறுவனமும் தனித்தன்மை ஒன்றாக கருதப்படுகிறது. எனவே உரிமையாளர் ஆயுள் மீது செலுத்தப்பட்ட காப்பீட்டு முனைமம் எடுப்பாக கருதப்படுகிறது.

> இது வியாபாரச் செலவின்மையால் இது செலவாக எடுத்துக் கொள்ளுதல் கூடாது.

5. இரட்டைப் பதிவு கணக்கு முறையின் இயல்புகள் யாவை?

பின்வருவன இரட்டைப்பதிவு முறையின் இயல்புகள் ஆகும்

- ஒவ்வொரு வணிக நடவடிக்கையும் இரு தன்மைகளைக் கொண்டிருக்கும்.
- இரண்டில், ஒன்று பலனை அல்லது மதிப்பினைப் பெறுவதாகும், மற்றொன்று பலனை அல்லது மதிப்பினை அளிப்பதாகவும் இருக்கும்.
- இவ்விரு தன்மைகள் குறைந்தது இரு கணக்குகள், அதாவது குறைந்த பட்சம் ஒரு பற்று, குறைந்த பட்சம் ஒரு வரவு என சம்பந்தப்பட்டிருக்கும்.
- ஒவ்வொரு பற்றும் அதற்குத் தகுந்த சமமான வரவினையும் ஒவ்வொரு வரவும் அதற்குத் தகுந்த சமமான பற்றினையும் பெற்றிருக்கும். ஒரு கணக்கு பற்று செய்யப்பட்டால் மற்றொரு கணக்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

6. குறிப்பேட்டில் பதிவு செய்யும் படி நிலைகளை விவரி.

குறிப்பேட்டில் பதிவு செய்வதற்கு பின்வரும் படிநிலைகள் பின்பற்றப்படுகின்றன

- நடவடிக்கைகளை ஆய்வு செய்து அதிலுள்ள கணக்குகளை (தன்மையின் அடிப்படையில்) அடையாளம் காண வேண்டும்.
- மேலே அடையாளம் கண்ட கணக்குளை ஆள்சார் க/கு, சொத்துக் க/கு அல்லது பெயரளவுக் க/கு என்று பாகுபடுத்த வேண்டும்.
- மேலே பாகுபடுத்தப்பட்ட (ஒரு நடவடிக்கைக்கு தேவையான) இரண்டு கணக்குகளுக்கும் பற்று, வரவு விதிகளைப் பொருத்திப் பார்க்க வேண்டும்.
- இரட்டைப் பதிவு முறையின் விதிகளைப் பயன்படுத்தி எந்த கணக்கினைப் பற்று வைக்க வேண்டும், எந்த கணக்கினை வரவு வைக்க வேண்டும் என கண்டறிய வேண்டும்.
- நடவடிக்கை நடந்த நாளினை, நாள் பத்தியில் பதிவு செய்திட வேண்டும்.
- பற்று வைக்க வேண்டிய கணக்கின் பெயரை விவரப் பத்தியின் இடது பக்கத்தில் மிகவும் நெருக்கமாக எழுத ஆரம்பித்து, அந்த வரியின் இறுதியில் "ப" என்று பதிவு செய்ய வேண்டும் இதற்கு எதிரான அதே வரியில் பற்றுப் பத்தியில் பற்று வைக்கும் தொகையினை பதிவு செய்திட வேண்டும்.
- வரவு வைக்க வேண்டிய கணக்கின் பெயரை இரண்டாவது வரியில் பக்க ஓரத்திலிருந்து சிறிது இடைவெளி விட்டு, விவரப் பத்தியில் எழுத வேண்டும். அதே வரியில் எதிராக உள்ள வரவு பத்தியில், வரவு வைக்கும் தொகையினை பதிவு செய்திட வேண்டும்.

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

- அடுத்த வரியில் விவரப் பத்தியில் சிறு விளக்கத்தினை பிறை அடைப்பில் கொடுக்க வேண்டும்.

7. இரட்டைப் பதிவு முறை என்றால் என்ன? அதன் நன்மைகளை எழுதுக?

ஒவ்வொரு நடவடிக்கையும் பணம் அல்லது பணமதிப்பு சம்பந்தப்பட்ட இரண்டுதன்மைகளைக் கொண்டுள்ளன. மதிப்பினைப் பெறுதல் ஒரு தன்மையாகவும், அதே மதிப்பில் செலுத்துதல் இன்னொரு தன்மையாகவும் இருக்கும். அனைத்து நடவடிக்கைகளிலும் உள்ள இந்த இரு தன்மைகளும் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுவதால் இரட்டைப் பதிவு முறை எனப்படும்.

இரட்டைப் பதிவு முறையின் நன்மைகள்

(1) துல்லியத் தன்மை

இரட்டைத் தன்மை முறையில் வணிகத்தின் அனைத்து நடவடிக்கைகளும், இரு தன்மைகளோடு கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகின்றன. இது கணக்கியலின் துல்லியத் தன்மையை பரிசோதிக்க உதவுகிறது.

(2) வணிக முடிவுகளை உறுதிப்படுத்துதல்

வணிகத்தில் ஏற்படும் செலவுகள், இழப்புகள், வருவாய் இலாபங்கள், சொத்துக்கள் பொறுப்புகள் போன்ற விவரங்களை உடனுக்குடன் பெற முடியும். இதன் உதவியால் ஒரு குறிப்பிட்ட கணக்காண்டின் நிகர இலாபம் அல்லது நிகர நட்டம் மற்றும் ஒரு குறிப்பிட்ட தேதியில் நிதி நிலையினைக் கணக்கிட முடியும்.

(3) ஒப்பீட்டு ஆய்வு

வணிக நிறுவனங்களின் தற்கால முடிவுகளை, முந்தய ஆண்டுகளின் முடிவுகளோடும் மேலும், வேறு பல நிறுவனங்களின் முடிவுகளோடும் ஒப்பீட்டு பார்க்க முடியும்.

(4) பொதுவான ஏற்புத் தன்மை

இம்முறையில் கணக்கினை பதிவு செய்வதை நிதி நிறுவனங்கள், அரசு அதிகாரிகள் மற்றும் பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். ஏனெனில், இது ஒரு முறையான, அறிவியல் பூர்வமான கணக்கு பராமரிப்பு முறையாகும்.

www.Padasalai.Net

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

அலகு 4

பேரேடு

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் (1 மதிப்பெண்)

1. பேரேட்டுக் கணக்குகள் தயாரிப்பதன் முக்கிய நோக்கம்

(அ) நிதி நிலைமையை அறிய (ஆ) இலாபம் அல்லது நட்டத்தை அறிய

(இ) நிதிநிலைமை மற்றும் இலாப நட்டத்தை அறிய

(ஈ) ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய

2. பற்று மற்றும் வரவு இனங்களை குறிப்பேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளில் எடுத்து எழுதும் நடைமுறையை இவ்வாறு அழைக்கலாம்.

(அ) கூட்டுதல் ***(ஆ) எடுத்தெழுதுதல்*** (இ) குறிப்பேட்டில் பதிதல் (ஈ) இருப்புக் கட்டுதல்

3. கு.ப.எ. என்பது

(அ) பேரேட்டு பக்க எண் ***(ஆ) குறிப்பேட்டு பக்க எண்***

(இ) சான்று சீட்டு எண் (ஈ) ஆணை எண்

4. ஒரு பேரேட்டுக் கணக்கின் பற்று பத்தியின் மொத்தத்திலிருந்தும் மற்றும் வரவுப் பத்தியின் மொத்தத்திலிருந்தும் நிகர இருப்பினை கண்டறியும் வழிமுறையை இவ்வாறு அழைக்கலாம்.

(அ) கூட்டுதல் (ஆ) எடுத்தெழுதுதல் (இ) குறிப்பேட்டில் பதிதல் ***(ஈ) இருப்புக் கட்டுதல்***

5. ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்

(அ) வரவு இருப்பு ***(ஆ) பற்று இருப்பு***

(இ) இருப்பு இன்மை (ஈ) பற்றும் மற்றும் வரவு இருப்பு

6. உரிமையாளரால் தொழிலுக்கு கொண்டு வரப்படும் தொகைக்கு வரவு செய்யப்படுவது

(அ) ரொக்க கணக்கு (ஆ) எடுப்புக் கணக்கு ***(இ) முதல் கணக்கு*** (ஈ) அனாமத்து கணக்கு

II.மிகக் குறுகிய வினாக்கள் (2 மதிப்பெண்)

1. பேரேடு எனறால் என்ன?

ஒரு தொழிலின் அனைத்து நடவடிக்கைகளையும் வகைப்படுத்தி நிரந்தரமாக பதிவு செய்யும் ஏடு பேரேடு ஆகும். ***- எல்.சி. கிராப்பர்***

2. எடுத்தெழுதுதல் என்றால் என்ன?

குறிப்பேட்டிலும் ஏனைய துணை ஏடுகளிலும் பதிவாகியுள்ள நடவடிக்கைகளை பேரேட்டில் உள்ள உரிய கணக்குகளுக்கு மாற்றிப் பதிவு செய்யும் வழிமுறையே எடுத்தெழுதல் ஆகும்.

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

3. பற்று இருப்பு என்றால் என்ன?

பேரேட்டுக் கணக்குகளை இருப்பு கட்டும் போது, பற்று பக்கத்தில் உள்ள மொத்தம், வரவு பக்கத்தில் உள்ள மொத்தத்தை விட அதிகமாக இருப்பின் அது பற்று இருப்பு எனப்படும்

4. வரவு இருப்பு என்றால் என்ன?

பேரேட்டுக் கணக்குகளை இருப்பு கட்டும் போது, வரவு பக்கத்தில் உள்ள மொத்தம், பற்று பக்கத்தில் உள்ள மொத்தத்தை விட அதிகமாக இருப்பின் அது வரவு இருப்பு எனப்படும்

5. கணக்கை இருப்புக் கட்டுதல் என்றால் என்ன?

இருப்புகட்டுதல் என்பது இரண்டு பக்கங்களின் தொகை பத்தியிலுள்ள மொத்த தொகைகளின் வேற்றுமைத் தொகையினை குறைவான மொத்த தொகை கொண்ட பக்கத்தில் எழுதுவது ஆகும்

III.குறுகிய வினாக்கள் (3 மதிப்பெண்)

3. நடவடிக்கைகள் குறிப்பேட்டிலிருந்து பேரேட்டிற்கு எவ்வாறு எடுத்தெழுதப்படுகின்றது?

குறிப்பேட்டிலிருந்து பேரேட்டிற்கு எடுத்தெழுதும் முறை

குறிப்பேட்டில் பதிவாகி உள்ள நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவு இனங்களை பேரேட்டில் உள்ள கணக்குகளுக்கு மாற்றம் செய்வது எடுத்தெழுதுதல் எனப்படும்.

(அ) குறிப்பேட்டில் பற்று வைக்கப்பட்டுள்ள கணக்கை காண்க. அக்கணக்கு ஏற்கனவே துவங்கப்படவில்லை என்றால் அப்பேரேட்டை துவக்க வேண்டும். கணக்கின் பெயரை மேல்பகுதியின் நடுவில் எழுத வேண்டும்'

(ஆ) கணக்கின் பற்றுப்பக்கத்தில் நாள் பத்தியில் நடவடிக்கை நிகழ்ந்த நாளைக் குறிப்பிட வேண்டும்.

(இ) விவரப்பத்தியில், குறிப்பேட்டில் வரவு வைக்கப்பட்டுள்ள கணக்கின் பெயரைப் பதிய வேண்டும்.

(ஈ) குறிப்பேட்டில் பற்றுத் தொகை பத்தியில் உள்ள இக்கணக்கிற்குரிய தொகையினை, தொகைப் பத்தியில் பதிய வேண்டும்.

(உ) குறிப்பேட்டில் வரவு வைக்கப்பட்டுள்ள கணக்கை கண்டறியவும். அவ்வாறு இல்லை என்றால் அக்கணக்கை பேரேட்டில் புதிதாக துவங்க வேண்டும். கணக்கின் பெயரை மேல் பகுதியின் நடுவில் எழுத வேண்டும். இப்போது பேரேட்டுக்கணக்கின் வரவுப் பக்கத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும், நடவடிக்கை நிகழ்ந்த நாளை, நாள் பத்தியில் பதிய வேண்டும். எகுறிப்பேட்டில் பற்று வைக்கப்பட்டுள்ள கணக்கின் பெயரை, விவரப்பத்தியில் எடுத்து எழுத வேண்டும். அதற்குரிய தொகையை தொகைப் பத்தியில் எழுத வேண்டும்.

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

www.Padasalai.Net www.TrbTnps.com

1. குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

பின்வருவன குறிப்பேட்டிற்கும் பேரேட்டிற்கும் உள்ள வேறுபாடுகள்

அடிப்படை	குறிப்பேடு	பேரேடு
1. பதிவு செய்தல்	நடவடிக்கைகள் நிகழ்ந்த உடன் குறிப்பேட்டில் பதிவுசெய்யப்படும்.	குறிப்பேடு தயாரித்த அதே நாளில் அல்லது துணை ஏடுகள் பராமரித்து வந்தால், ஒரு குறிப்பிட்ட காலத்தின் இறுதியில் அதாவது வாரத்தின் கடைசி நாள் அல்லது இரு வாரங்களுக்கு ஒருமுறை பேரேட்டில் எடுத்தெழுதப்படும்.
2. பதிவு செய்யும் நிலை	குறிப்பேட்டில் பதிவது முதல் நிலையாகும்.	குறிப்பேட்டில் பதிந்த பிறகு பேரேடு தயாரிப்பதால், இது இரண்டாவது நிலையாகும்.
3. பதிவு செய்யும் வரிசை	குறிப்பேட்டில் நடவடிக்கைகள் நிகழ்ந்த வரிசைப்படி அதாவது நடவடிக்கைகள் நிகழ்ந்த நாளின்படி பதிவு செய்யப்படுகிறது.	கணக்குகளின் வரிசைப்படி பேரேட்டில் பதிவுகள் செய்யப்படுகின்றன.
4. வழிமுறை	குறிப்பேட்டில் பதிவுசெய்வதை குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்கிறோம்.	பேரேட்டில் பதிவு செய்வதை எடுத்தெழுதுதல் என்கிறோம்.
5. இருப்பாய்வு தயாரிக்க உதவுதல்	குறிப்பேட்டில் பதியப்பட்டுள்ள தொகைகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்க இயலாது.	பேரேட்டுக் கணக்குகளின் மூலம் கிடைக்கப்பெற்ற இருப்புகளே இருப்பாய்வு தயாரிக்க அடிப்படையாகிறது.
6. பதிவிற்கான ஆதாரம்	ஆதார ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பேட்டுப்பதிவுகள் செய்யப்படுகின்றன.	குறிப்பேட்டுப் பதிவுகளைக் கொண்டு பேரேடு தயாரிக்கப்படுகிறது.
7. நிகர நிலை	குறிப்பேட்டினைக் கொண்டு ஒரு கணக்கின் நிகர நிலையினை அறிய முடியாது.	பேரேட்டினைக் கொண்டு ஒரு கணக்கின் நிகர நிலையினை அறியலாம்.

www.Padasalai.Net

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

2. பேரேடு என்றால் என்ன? அதன் பயன்பாடுகள் யாவை?

பேரேடு: ஒரு தொழிலின் அனைத்து நடவடிக்கைகளையும் வகைப்படுத்தி நிரந்தரமாக பதிவு செய்யும் ஏடு பேரேடு ஆகும் -***எல்.சி. கிராப்பர்***

பயன்கள்

1. ஒரு குறிப்பிட்ட கணக்கை பற்றிய தகவல்களை உடனடியாக பெற முடிகிறது.
2. வணிக நடவடிக்கைகளை கட்டுப் படுத்த முடியும்
3. இருப்பாய்வு தாயாரிக்க முடியும்
4. நிதி நிலை அறிக்கைகளை தயாரிக்க உதவுகிறது

3. நடவடிக்கைகள் குறிப்பேட்டிலிருந்து பேரேட்டிற்கு எவ்வாறு எடுத்தெழுதப்படுகின்றது?

குறிப்பேட்டிலிருந்து பேரேட்டிற்கு எடுத்தெழுதும் முறை

குறிப்பேட்டில் பதிவாகி உள்ள நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவு இனங்களை பேரேட்டில் உள்ள கணக்குகளுக்கு மாற்றம் செய்வது எடுத்தெழுதுதல் எனப்படும்.

(அ) குறிப்பேட்டில் பற்று வைக்கப்பட்டுள்ள கணக்கை காண்க. அக்கணக்கு ஏற்கனவே துவங்கப்படவில்லை என்றால் அப்பேரேட்டை துவக்க வேண்டும். கணக்கின் பெயரை மேல்பகுதியின் நடுவில் எழுத வேண்டும்'

(ஆ) கணக்கின் பற்றுப்பக்கத்தில் நாள் பத்தியில் நடவடிக்கை நிகழ்ந்த நாளைக் குறிப்பிட வேண்டும்.

www.Padasalai.Net

(இ) விவரப்பத்தியில், குறிப்பேட்டில் வரவு வைக்கப்பட்டுள்ள கணக்கின் பெயரைப் பதிய வேண்டும்.

(ஈ) குறிப்பேட்டில் பற்றுத் தொகை பத்தியில் உள்ள இக்கணக்கிற்குரிய தொகையினை, தொகைப் பத்தியில் பதிய வேண்டும்.

(உ) குறிப்பேட்டில் வரவு வைக்கப்பட்டுள்ள கணக்கை கண்டறியவும். அவ்வாறு இல்லை என்றால் அக்கணக்கை பேரேட்டில் புதிதாக துவங்க வேண்டும். கணக்கின் பெயரை மேல் பகுதியின் நடுவில் எழுத வேண்டும். இப்போது பேரேட்டுக்கணக்கின் வரவுப் பக்கத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும், நடவடிக்கை நிகழ்ந்த நாளை, நாள் பத்தியில் பதிய வேண்டும். எகுறிப்பேட்டில் பற்று வைக்கப்பட்டுள்ள கணக்கின் பெயரை, விவரப்பத்தியில் எடுத்து எழுத வேண்டும். அதற்குரிய தொகையை தொகைப் பத்தியில் எழுத வேண்டும்.

4. பேரேட்டுக் கணக்கின் இருப்பு கட்டுதலின் வழிமுறையை விளக்குக.

பேரேட்டுக் கணக்குகளை இருப்புக் கட்டுவதற்கு பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

(i) பற்றுப் பக்கத்தில் உள்ள தொகைப் பத்தியையும் மற்றும் வரவுப் பக்கத்தில் உள்ள தொகைப் பத்தியையும் தனித்தனியாக கூட்ட வேண்டும்

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

(ii) இரண்டு பக்கங்களிலும் கிடைக்கப்பெற்ற மொத்த தொகைகளின் வித்தியாசத்தைக் கணக்கிட வேண்டும்.

(iii) இவை இரண்டிற்கும் உள்ள வித்தியாசத் தொகையை, குறைவாக மொத்தத் தொகை உடைய பக்கத்தில் விவரப்பத்தியில் "***இருப்பு கீ/இ***" என எழுதி, அந்த தொகையை தொகைப் பத்தியிலும், அதன் எதிரே நாள் பத்தியில் அந்த மாதத்தின் கடைசி நாளையும் குறிப்பிட வேண்டும்.

(iv) இப்போது பற்று மற்றும் வரவு என்ற இருபத்திகளையும் கூட்ட வேண்டும். அவை சமமாக இருக்கும். இரு பக்கங்களின் அக்கூட்டுத் தொகையினை ஒரே கோட்டில் கிடைமட்டமாகப் பதிய வேண்டும். அக் கூட்டுத் தொகையினை வேறுபடுத்திக் காட்டுவதற்காக அத் தொகையின் மேலும் கீழும் கோடுகளிட்டுக் காட்டப்பட வேண்டும்.

(v) வித்தியாசத் தொகையை கூட்டுத் தொகைக்குக் கீழே எதிர் பக்கத்தில் கீழ் கொண்டு வர வேண்டும். விவரப்பத்தியில் கீழே கொணரப்பட்ட அவ் வித்தியாசத் தொகையின் எதிரே "***இருப்பு கி/கொ***" என எழுதப்பட்டு நாள் பத்தியில் அடுத்த கணக்கியல் காலத்தின் முதல் நாளைக் குறிப்பிட வேண்டும்.

(vi) ஒரு கணக்கின் பற்றுப் பக்கத்தின் மொத்தம் அதிகமாக இருந்தால், அதன் இருப்புத் தொகை பற்று இருப்பு ஆகும். ஒரு கணக்கின் வரவு பக்கத்தின் மொத்தம் அதிகமாக இருந்தால், அதன் இருப்புத் தொகை வரவு இருப்பு ஆகும். இரண்டு பக்கங்களும் சமமாக இருந்தால் அக்கணக்கு எந்த இருப்பையும் காட்டாது.

www.Padasalai.Net

இருப்பை தீர்மானிக்க பின்வரும் விதிகளைப் பின்பற்றலாம்:

பற்று மொத்தம் > வரவு மொத்தம் = பற்று இருப்பு

வரவு மொத்தம் > பற்று மொத்தம் = வரவு இருப்பு

பற்றுமொத்தம் = வரவு மொத்தம் = இருப்பு இல்லை

www.Padasalai.Net www.TrbTnps.com

அலகு 5

இருப்பாய்வு

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் (1 மதிப்பெண்)

1. இருப்பாய்வு என்பது ஒரு

(அ) அறிக்கை (ஆ) கணக்கு (இ) பேரேடு (ஈ) குறிப்பேடு

2. பேரேட்டுக் கணக்குகளை தயாரித்து முடித்தவுடன் அடுத்து தயாரிக்கப்படுவது

(அ) வியாபாரக் கணக்கு ***(ஆ) இருப்பாய்வு*** (இ) குறிப்பேடு (ஈ) இலாபநட்டக் கணக்கு

3. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?

(அ) ஆள்சார் கணக்குகள் மட்டும் (ஆ) சொத்துக் கணக்குகள் மட்டும்

(இ) பெயரளவு கணக்குகள் மட்டும் ***(ஈ) அனைத்து கணக்குகளும்***

4. கீழ்கண்டவற்றில் எது எவை இருப்பாய்வு தயாரிப்பதன் நோக்கங்களாகும்

(அ) அனைத்து பேரேட்டுக் கணக்குகளின் சுருக்கத்தைத் தருவது.

(ஆ) இறுதிக் கணக்குகளைத் தயாரிக்க உதவுவது

(இ) கணக்குகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையைப் பரிசோதிப்பது

(ஈ) (அ), (ஆ) மற்றும் (இ)

5. இருப்பாய்வு தயாரிக்கும்போது, கணக்காளர் இருப்பாய்வின் வரவு பக்கத்தில் மொத்த தொகை ரூ.200/- குறைவாக இருப்பதைக் கண்டறிந்தார். அந்த வேறு -பாட்டினை அவர் என்ன செய்வார்?

(அ) அனாமத்து கணக்கில் பற்று செய்வார்

(ஆ) அனாமத்து கணக்கில் வரவு செய்வார்

(இ) ஏதேனும் பற்று இருப்புக்கொண்ட கணக்கில் சரி செய்வார்

(ஈ) ஏதேனும் வரவு இருப்புக்கொண்ட கணக்கில் சரி செய்வார்

6. பற்று இருப்புகளும் மற்றும் வரவு இருப்புகளும் சமமாக இருக்கின்றனவா என அறிய அனைத்துப் பேரேட்டுக் கணக்குகளையும் கொண்டு தயாரிக்கப்படும் ஒரு பட்டியல்

(அ) குறிப்பேடு (ஆ) நாளேடு ***(இ) இருப்பாய்வு*** (ஈ) இருப்பு நிலைக் குறிப்பு

7. பின்வரும் எந்த முறை அல்லது முறைகளில் இருப்பாய்வு தயாரிக்கப்படுகிறது?

(அ) இருப்பு முறை

(ஆ) மொத்தத் தொகை முறை

(இ) மொத்தத் தொகை முறை மற்றும் இருப்பு முறை

(ஈ) (அ), (ஆ) மற்றும் (இ)

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

8. கீழ்க்கண்ட கணக்குகளில் எந்தக் கணக்கின் இருப்பு இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் தோன்றும்?

(அ) பற்பல கடனீந்தோர் கணக்கு (ஆ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

(இ) எடுப்புகள் கணக்கு (ஈ) முதல் கணக்கு

9. இருப்பாய்வில் பற்றுப்பத்தியின் மொத்தமும் வரவுப்பத்தியின் மொத்தமும் வேறுபட்டால் அதை எடுத்து எழுத வேண்டிய கணக்கு

(அ) வியாபார கணக்கு (ஆ) வேறுபாட்டு கணக்கு

(இ) அனாமத்து கணக்கு (ஈ) இதர கணக்கு

10. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது

(அ) ஆண்டு இறுதியில் ***(ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்***

(இ) ஒரு பருவ காலம் முடிந்ததும் (ஈ) இவை ஏதும் இல்லை

II.மிகக் குறுகிய வினாக்கள் (2 மதிப்பெண்)

1. இருப்பாய்வு என்றால் என்ன?

பேரேட்டு கணக்கிலுள்ள பற்று இருப்புகளையும், மற்றும் வரவு இருப்புகளையும் கொண்டு கணக்கீட்டு சரித்தன்மையை பரிசோதிக்க தயாரிக்கப்படும் ஓர் அறிக்கை இருப்பாய்வு ஆகும். ***-ஜே. ஆர். பேட்லிபாய்***

www.Padasalai.Net

2. இருப்பாய்வின் படிவம் தருக?

____________ஆம் நாளன்றைய இருப்பாய்வு

வ. எண்	கணக்கின் பெயர் / விவரம்	பே. ப. எ.	பற்று இருப்பு ₹	வரவு இருப்பு ₹

3. இருப்பாய்வு தயாரிக்கும் முறைகள் யாவை?

1. இருப்பு முறை
2. மொத்த தொகை முறை
3, மொத்த தொகை மற்றும் இருப்பு முறை

4. கீழ்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டுக?

1, வெளித்தூக்குக் கூலி - **பற்று** 2. உள்தூக்குக் கூலி - **பற்று**

3, விற்பனை - **வரவு** 4. கொள்முதல் - **பற்று**

5. வராக் கடன் - **பற்று** 6. வட்டிச் செலுத்தியது - **பற்று**

7. வட்டி பெற்றது - **வரவு** 8. தள்ளுபடி பெற்றது - **வரவு**

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

9. முதல் - **வரவு** 10, எடுப்புகள் - **பற்று**
11. விற்பனைத் திருப்பம் - **பற்று** 12. கொள்முதல் திருப்பம் - **வரவு**

III.குறுகிய வினாக்கள் (3 மதிப்பெண்)

1. இருப்பாய்வு தயாரிப்பதன் நோக்கங்கள் யாவை?

1.கணக்கீட்டின் சரித்தன்மையை பரிசோதனை செய்ய உதவுகிறது.

இருப்பாய்வு என்பது கணக்கேடுகள் பராமரிப்பு பணியில் கணக்கீட்டின் சரித்தன்மையை சரிபார்க்க உதவும் ஒரு வழிமுறையாகும். இருப்பாய்வின் பற்றுப்பத்தியின் மொத்தத் தொகையும் மற்றும் வரவுப் பத்தியின் மொத்தத் தொகையும் சமமாக இருந்தால், கணக்குகளின் கணக்கீட்டு சரித்தன்மையை சரியாக இருக்கும் என்று அனுமானிக்க முடியும்.

2.இறுதி கணக்குகளை தயாரிக்க அடிப்படையாக உள்ளது.

இருப்பாய்விலிருந்து எடுக்கப்பட்ட பேரேட்டுக் கணக்குகளின் இருப்புகளைக் கொண்டு 'நிதிநிலை அறிக்கைகளான வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்பு நிலைக்குறிப்பையும் தயாரிக்க முடியும்.

3.பிழைகளின் கண்டுபிடிக்க உதவுகிறது.

இருப்பாய்வு எப்போதாவது சமன்படாவிட்டால், அது கணக்கேடுகளில் பிழைகள். நேர்ந்திருக்கும் என்பதனை உணர்த்தும், பிழைகள் கண்டு பிடிக்கப்பட்ட பின், இறுதிக் கணக்குகள் தயாரிப்பதற்கு முன் திருத்தம் செய்ய முடிகிறது.

www.Padasalai.Net

4.பேரேட்டுக் கணக்குகள் குறித்த தகவல்களை சுருக்கமாக தருகிறது.

பேரேட்டு கணக்குகளின் முழுத்தொகுப்பை இருப்பாய்வு காட்டுகிறது.

2. இருப்பாய்வின் குறைபாடுகள் யாவை?

> ஒரு நிறுவனம் இருப்பாய்வு தயாரிக்க வேண்டுமானால், அந்நிறுவனத்தின் கணக்குகள் இரட்டைப்பதிவு முறையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும்.

> ஏதாவது நடவடிக்கைகள் கணக்கேடுகளில் விடுபட்டு இருப்பினும் இருப்பாய்வு சமன்பட்டு, விடும்.

> கணக்கேடுகளில் ஏதேனும் பிழைகள் ஏற்பட்டிருந்தாலும் இருப்பாய்வு சமன்பட்டு விடும்..

> இருப்பாய்வு முறையாக தயாரிக்கவில்லை என்றால், அதனை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் இறுதிக் கணக்குகள், ஒரு நிறுவனத்தின் உண்மையான நிதிநிலையை உணர்த்தாது.

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

3. இருப்பாய்வு என்பது கணக்கேடுகளில் உள்ள கணக்கீட்டின் சரித் தன்மையை அறிய உதவும் முதல் ஆதார ஆவணமாகும் என்பதை ஏற்றுக் கொள்கிறீர்களா? காரணம் கூறுவும்?

> இருப்பாய்வு என்பது ஒரு குறிப்பிட்ட நாளில் அனைத்தும் பேரேட்டு கணக்குகளிலும் உள்ள பற்று இருப்புகளையும் மற்றும் வரவு இருப்புகளையும் உள்ளடக்கிய ஓர் அறிக்கை ஆகும்.

> இரட்டைப் பதிவு முறையில் கணக்கேடுகளைப் பராமரிக்கும் அடிப்படைக் கோட்பாடானது ஒவ்வொரு பற்றிற்கும் அதற்கு நிகரான மற்றும் சரியான வரவும், அது போன்று ஒவ்வொரு.. வரவிற்கும் அதற்கு நிகரான மற்றும் சரியான பற்றும் இருக்க வேண்டும் என்பதாகும். எனவே, கணக்குகளை இருப்புக் கட்டும் பொழுது, அதன் பற்று இருப்புகளின் மொத்தமும் மற்றும் வரவு இருப்புகளின் மொத்தமும் சமமாக இருக்க வேண்டும்.

> அவ்வாறு பற்று இருப்பின் மொத்தத்தொகையும் மற்றும் வரவு இருப்பின் மொத்தத் தொகையும் சமமாக இருக்கமேயானால், கணக்கேடுகள் பராமரிப்புப் பணியில் ஒரு குறிப்பிட்ட நாளில் பதிவுகளின் கணக்கீடு சரியாக இருக்கிறதா என்பதனை உடனடியாகவும், தெளிவாகவும் அறிந்த கொள்ள உதவக்கூடிய ஒரு சான்றாக அமைகிறது.

> அதே நேரத்தில், கணக்கியல் சரித்தன்மையை சோதிக்க இது ஒரு இறுதிச் சான்றாக எடுத்துக் கொள்ள முடியாது. ஏனெனில், விதிப்பிழைகள், ஈடுகட்டும் பிழைகள் மற்றும் முழுவிடு பிழைகள் போன்றவைகளை ஒரு இருப்பாய்வு வெளிப்படுத்தாது.

www.Padasalai.Net

அலகு 6

துணை ஏடுகள் 1

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் (1 மதிப்பெண்)

1. கொள்முதல் ஏட்டில் பதிவு செய்வது

(அ) அனைத்து சரக்குகளின் கொள்முதல்

(ஆ) அனைத்து சொத்துக்களின் கடன் கொள்முதல்

(இ) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல்

(ஈ) அனைத்து சொத்துக்களின் கொள்முதல்

2. ஒரு குறிப்பிட்ட கால கொள்முதல் ஏட்டின் மொத்தம், எடுத்தெழுதப்படுவது

(அ) கொள்முதல் கணக்கின் பற்றுபக்கம்

(ஆ) விற்பனை கணக்கின் பற்றுபக்கம்

(இ) கொள்முதல் கணக்கின் வரவுப் பக்கம்

(ஈ) விற்பனை கணக்கின் வரவுப் பக்கம்

3. விற்பனை ஏடு எதைப் பதிவு செய்ய உதவுகிறது?

(அ) அனைத்து சரக்குகளின் விற்பனை

(ஆ) அனைத்து சொத்துக்களின் கடன் விற்பனை

(இ) அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை

(ஈ) அனைத்து சொத்துக்கள் மற்றும் சரக்குகள் விற்பனை

4. விற்பனை ஏட்டின் மொத்தம் ஒரு குறிப்பிட்ட கால அளவில் வரவு வைக்கப்படுவது

(அ) விற்பனை கணக்கு (ஆ) ரொக்க கணக்கு

(இ) கொள்முதல் கணக்கு (ஈ) உரிய குறிப்பேடு

5. கொள்முதல் திருப்ப ஏடு பதிவு செய்வது.

(அ) சரக்களித்தோருக்கு, உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு

(ஆ) அளித்தவரிடம் உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சொத்துகள்

(இ) உடனடியாக பணம் பெற்றுக் கொண்டு சொத்து வாங்கியவரிடம் திருப்பியது

(ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

6. விற்பனைத் திருப்ப ஏடு பதிவு செய்வது

(அ) வாடிக்கையாளரால் திருப்பிய சரக்குகளுக்கு உடனடியாக பணம் செலுத்தியது.

(ஆ) வாடிக்கையாளரால் திருப்பிய சரக்குகளுக்கு உடனடியாக பணம் செலுத்தாதது

(இ) வாடிக்கையாளரால் திருப்பிய சொத்துகளுக்கு உடனடியாக பணம் செலுத்தாதது

(ஈ) வாடிக்கையாளரால் திருப்பிய சொத்துகளுக்கு உடனடியாக பணம் செலுத்தியது

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

7. நிலைச்சொத்துக்கள் கடனுக்கு வாங்கியது பதிவு செய்ய வேண்டிய ஏடு

(அ) கொள்முதல் ஏடு (ஆ) விற்பனை ஏடு

(இ) கொள்முதல் திருப்ப ஏடு ***(ஈ) உரிய குறிப்பேடு***

8. விற்பனை ஏட்டில் பதிவு செய்வதற்கு பயன்படும் அடிப்படை ஆவணம்

(அ) பற்றுக் குறிப்பு (ஆ) வரவு குறிப்பு

(இ) இடாப்பு (ஈ) ரொக்க இரசீது

9. பின்வரும் வாக்கியங்களில் எது உண்மையல்ல

(அ) ரொக்கத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது

(ஆ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது உரிய குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகிறது

(இ) வியாபாரத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது

(ஈ) மாற்றுச்சீட்டின் செலுத்தற்குரிய நாளை கணக்கிடும்போது மூன்று நாட்கள் சலுகை நாட்களாகக் கூட்டப்படுகின்றன,

10. இறுதிப்பதிவுகள் பதிவு செய்யுமிடம்

(அ) ரொக்க ஏடு (ஆ) பேரேடு

(இ) உரிய குறிப்பேடு (ஈ) கொள்முதல் ஏடு

II.மிகக் குறுகிய வினாக்கள் (2 மதிப்பெண்)

1. துணை ஏடுகளின் வகைகளைக் குறிப்பிடுக,

2. கொள்முதல் ஏடு என்றால் என்ன?

> இது ஒரு துணை ஏடு ஆகும்.

> கடனுக்கு வாங்கிய சரக்குகள் மட்டும் பதியப்படும்

> ரொக்கத்திற்கு வாங்கிய சரக்குகள் இடம் பெறாது

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

3. கொள்முதல் திருப்ப ஏடு என்றால் என்ன?

> ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட சரக்குகளை ரொக்கம் உடனடியாக பெறாமல் சரக்கு அளித்தவருக்கே திருப்பி அனுப்பப்படும் நடவடிக்கைகளின் பதிவு கொள்முதல் திருப்ப ஏடு ஆகும்.

4. விற்பனை ஏடு என்றால் என்ன?

> இது ஒரு துணை ஏடு ஆகும்
> கடனுக்கு விற்ற சரக்குகள் மட்டும் பதியப்படும்
> ரொக்கத்திற்கு விற்ற சரக்குகள் இடம் பெறாது

5. விற்பனைத் திருப்ப ஏடு என்றால் என்ன?

ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட சரக்குகளை ரொக்கம் உடனடியாக செலுத்தாமல் சரக்கு பெற்றவரால் திருப்பி அனுப்பப்படும் நடவடிக்கைகளின் பதிவு விற்பனை திருப்ப ஏடு ஆகும்.

6. பற்றுக்குறிப்பு என்றால் என்ன?

> பற்று குறிப்பு என்பது ஓர் ஆவணம்
> சரக்கை திருப்பி அனுப்பும் போது தயாரிக்கப்படும் ஒரு அறிக்கை ஆகும்
> இதன் மூலம் சரக்கீந்தோரின் கணக்கில் பற்று செய்யப்படும் தொகை குறித்து தெரிவிக்கப்படும்

www.Padasalai.Net

7. வரவு குறிப்பு என்றால் என்ன?

வரவுக்குறிப்பு விற்பனையாளரால் தயார் செய்து பொருளை வாங்குபவருக்கு திரும்ப பெறும் போது அளிக்கப்படும் அறிக்கை ஆகும்.

8. உரிய குறிப்பேடு என்றால் என்ன?

துணை ஏடுகளில் பதிவு செய்ய முடியாத பதிவுகளை பதிவு செய்யும் ஏடு உரிய குறிப்பேடு ஆகும்.

உரிய குறிப்பேட்டில் பதியப்படும் பதிவுகள்: தொடக்கப் பதிவுகள், இறுதிப் பதிவுகள், சரிக்கட்டுப் பதிவுகள், மாற்றுப் பதிவுகள், திருத்தப் பதிவுகள், இதர பதிவுகள் போன்றவை

9. மாற்றுச் சீட்டின் வரைவிலக்கணம் தருக,

“மாற்றுச்சீட்டு என்பது குறிப்பிட்ட நபருக்கோ அவரது ஆணைக்கேற்பவோ அல்லது அந்த ஆவணத்தை கொண்டு வருபவருக்கோ குறிப்பிட்ட பணத்தை செலுத்துமாறு குறிப்பிட்ட நபருக்கு ஒருவர் எந்த வித நிபந்தனையும் இல்லாமல் எழுத்து மூலமாக கையொப்பமிட்டு விடுக்கும் ஆணைத் தாங்கிய ஆவணமாகும்.”

- மாற்றுமுறை ஆவணச்சட்டம் 1881

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

10. தொடக்கப்பதிவு என்றால் என்ன?

முந்தைய ஆண்டுகளின் பொறுப்புகள், சொத்துகள் மற்றும் முதலினை கணக்கில் கொண்டு வருவதற்காக பதியப்படும் பதிவுகள் தொடக்கப் பதிவுகள் ஆகும்

11. இடாப்பு என்றால் என்ன?

> இடாப்பு என்பது சரக்கு விற்பனையாளரால் சரக்கை வாங்குபவருக்கு அளிக்கப்படும் அறிக்கை ஆகும்.

> இதில் பொருட்கள் அல்லது சேவைகள் பற்றிய விவரம், அதன் மதிப்பு போன்றவை குறிப்பிடப்பட்டிருக்கும்

III.குறுகிய வினாக்கள் (3 மதிப்பெண்)

1. கொள்முதல் ஏட்டின் படிவத்தினைத் தருக?

படிவம் – கொள்முதல் ஏடு / கொள்முதல் குறிப்பேடு

நாள்	விவரம்	இடாப்பு எண்	பேரேட்டுப் பக்க எண்	தொகை ₹	
				விளக்கம்	மொத்தம்
(i)	(ii)	(iii)	(iv)	(v)	(vi)
	கொள்முதல் க/கு ப				

2. பின் வரும் நடவடிக்கைகளை எந்த துணை ஏட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடுக.

ரொக்கத்திற்கு சரக்கு விற்றது - **ரொக்க ஏடு**

கடனுக்கு சரக்கு வாங்கியது - **கொள்முதல் ஏடு**

கடனுக்கு சரக்கு விற்றது - **விற்பனை ஏடு**

உரிமையாளர் சரக்குகளை தனது சொந்த பயன்பாட்டிற்காக எடுத்தது - **உரிய குறிப்பேடு**

சரக்கு அளித்தோருக்கு உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு - **கொள்முதல் திருப்ப ஏடு**,

கடனுக்கு சொத்துக்கள் வாங்கியது - **உரிய குறிப்பேடு**

3. துணை ஏடுகளின் நன்மைகள் யாவை?

1.வணிக நடவடிக்கைகளின் சரியான மற்றும் குறையான பதிவு

அனைத்து வணிக நடவடிக்கைகளும் தனித் தனியாக அதற்குரிய ஏடுகள் பயன்படுத்தப் படுவதால், நடவடிக்கைகள் சரியான மற்றும் முறையான துணை ஏடுகளில் பதிவு செய்யப்படுகின்றன.

2.வசதியாக எடுத்தெழுதுதல்

அனைத்து நடவடிக்கைகளிலும் ஒத்த தன்மையுடையவைகள் ஓரிடத்தில், அதாவது ஒரு துணை ஏட்டில் பதிவு செய்யப்படுகின்றன. இது எடுத்தெழுதுவதை எளிதாக்குகிறது.

3.வேலைப் பகுப்பு

குறிப்பேடு பல துணை ஏடுகளாகப் பிரிக்கப்படுவதால் வேலைப் பகுப்பு சாத்தியமாகிறது. துணை ஏடுகளில் பதிவு செய்யும் பொறுப்பு பல நபர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது.

4.திறமை

வேலைப் பகுப்பு காரணமாக பணியாளர்களின் பணிச்சுமை குறைகிறது. எழுதுபொருள்கள் செலவு குறைகிறது. ஒரு நபர் ஒரே வேலையை திரும்பத் திரும்ப செய்வதால் அவ் வேலையைக் கையாள்வதில் அவரது திறமை அதிகரிக்கிறது.

5.தவறுகளும், மோசடிகளும் தவிர்க்கப்படுதல்

ஒரு எழுத்தர் செய்யும் பணி மற்றொரு எழுத்தரால் தானாகவே சரிபார்க்கும் விதத்தில் பணிகள் வகைப்படுத்தப்படுகின்றன. உள் தணிக்கை மூலம் தவறுகளும், மோசடிகளும் தவிர்க்கப்படுகின்றன.

6.தகவல்களைப் பெறுதல்

வேண்டிய தகவல்களை நாம் உடனே பெறமுடியும். உதாரணமாக ஒரு மாதத்திற்கான கடன் விற்பனையை விற்பனை ஏட்டின் மூலமாக அறிய முடியும்.

www.Padasalai.Net

4. சிறு குறிப்பு வரைக.

(அ) மாற்றுச் சீட்டில் மேலெழுதுதல்

மாற்றுச் சீட்டின் உரிமையை வேறொருக்கு மாற்றித் தருவதற்காக மாற்றுச் சீட்டின் முகப்பில் அல்லது பின்புறத்தில் கையொப்பம் இடுவது மாற்றுச் சீட்டில் மேலெழுதுதல் ஆகும்.

(ஆ) மாற்றுச் சீட்டை தள்ளுபடி செய்தல்

மாற்றுச் சீட்டை வைத்திருப்பவர், அச்சீட்டு முதிர்வடையும் முன்னரே பணம் பெற விரும்பினால் அதனை வங்கியில் தள்ளுபடி செய்தல் எனப்படும்

www.Padasalai.Net www.TrbTnps.com

அலகு 7

துணை ஏடுகள் 2

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் (1 மதிப்பெண்)

1. ரொக்க ஏடு ஒரு

(அ) துணை ஏடு (ஆ) முதன்மை ஏடு

(இ) உரிய குறிப்பேடு ***(ஈ) துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும்***

2. ரொக்க ஏடு பதிவு செய்வது

(அ) அனைத்து ரொக்கப் பெறுதல்கள் (ஆ) அனைத்து ரொக்கச் செலுத்தல்கள்

(இ) (அ), (ஆ) ஆகிய இரண்டும் (ஈ) அனைத்து கடன் நடவடிக்கைகள்

3, சாதாரண ரொக்க ஏட்டை வைத்திருக்கும் ஒரு நிறுவனம், எந்த கணக்கை தயாரிக்க தேவை இல்லை?

(அ) பேரேட்டில் விற்பனைக் கணக்கு (ஆ) பேரேட்டில் கொள்முதல் கணக்கு

(இ) பேரேட்டில் முதல் கணக்கு ***(ஈ) பேரேட்டில் ரொக்கக் கணக்கு***

4. தள்ளுபடி, ரொக்கம் மற்றும் வங்கி பத்திகளுடைய ரொக்க ஏட்டை இவ்வாறு அழைக்கலாம்.

(அ) சாதாரண ரொக்க ஏடு (ஆ) இருபத்தி ரொக்க ஏடு

(இ) முப்பத்தி ரொக்க ஏடு (ஈ) சில்லறை ரொக்க ஏடு

5. முப்பத்தி ரொக்க ஏட்டில், முன்னிருந்து தூக்கி எழுதப்பட்ட வங்கி மேல்வரைப் பற்றின் இருப்பு தோன்றுவது

(அ) ரொக்கப்பத்தி பற்றுப்பக்கம் (ஆ) ரொக்கப்பத்தி வரவுப்பக்கம்

(இ) வங்கிப்பத்தி பற்றுப்பக்கம் ***(ஈ) வங்கிப்பத்தி வரவுப்பக்கம்***

6. கீழ்க்கண்டவற்றில் எது எதிர்ப்பதிவாக பதிவு செய்யப்படும்?

(அ) சொந்த செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ராக்கம்

(ஆ) அலுவலக செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்

(இ) வாடிக்கையாளர், நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்திய தொகை

(ஈ) வங்கி எடுத்துக் கொண்ட வட்டி

7. ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகளை ரொக்க ஏட்டில் பதிந்தால், அது

(அ) எதிர்ப்பதிவு (ஆ) கூட்டுப் பதிவு (இ) ஒற்றைப் பதிவு (ஈ) சாதாரணப் பதிவு

8. சில்லறை ரொக்க ஏட்டின் இருப்பு

(அ) ஒரு செலவு (ஆ) ஒரு இலாபம் ***(இ) ஒரு சொத்து*** (ஈ) ஒரு பொறுப்பு

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

9. எந்தச் செலவிற்கு சில்லறை ரொக்கத்திலிருந்து கொடுக்கலாம்?

(அ) தபால் செலவு மற்றும் பயணச் செலவுகள் (ஆ) மேலாளரின் ஊதியம்

(இ) அறைகலன் மற்றும் பொருத்துகைகள் வாங்க (ஈ) மூலப் பொருட்கள் வாங்க

10. சிறிய செலவினங்களைப் பதியும் ஏடு

(அ) ரொக்க ஏடு (ஆ) கொள்முதல் ஏடு

(இ) செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு ஏடு ***(ஈ) சில்லறை ரொக்க ஏடு***

II.மிகக் குறுகிய வினாக்கள் (2 மதிப்பெண்)

1. ரொக்க ஏடு என்றால் என்ன?

> ரொக்க ஏடு என்பது ரொக்க நடவடிக்கைகளை மட்டும் நாள் வரிசைப்படி பதியக்கூடிய ஏடாகும்.

> ரொக்க ஏட்டில் ரொக்கப் பெறுதல்கள் பற்றுப் பக்கத்திலும், ரொக்கச் செலுத்தல்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்படுகின்றன.

2. ரொக்க ஏட்டின் வகைகள் யாவை?

> தனிப்பத்தி ரொக்க ஏடு

> இருப்பத்தி ரொக்க ஏடு (தள்ளுபடி, ரொக்கம் பத்திகள்)

> முப்பத்தி ரொக்க ஏடு (தள்ளுபடி, ரொக்கம், வங்கிப் பத்திகள்)

> சில்லறை ரொக்க ஏடு

3. சாதாரண ரொக்க ஏடு (அல்லது) தனிப்பத்தி ரொக்க ஏடு என்றால் என்ன?

> ஒரு பேரெட்டு கணக்கைப் போன்று ஒவ்வொரு பக்கத்திலும் தொகைக்கான பத்தி ஒன்றை கொண்டிருக்கும்

> ரொக்க நடவடிக்கைகள் மட்டும் பதியப்படும்

> ரொக்கப் பெறுதல்கள் பற்று பகுதியிலும், ரொக்கச் செலுத்துதல்கள் வரவு பகுதியிலும் பதியப்படும்

4. தனிப்பத்தி ரொக்க ஏட்டின் படிவம் தருக?

ப தனிப்பத்தி ரொக்க ஏடு வ

நாள்	பெறுதல்கள்	இ. எ.	பே. ப. எ.	தொகை ₹	நாள்	செலுத்தல்கள்	சா. சீ. எ.	பே. ப. எ.	தொகை ₹
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

5. இருபத்தி ரொக்க ஏடு என்றால் என்ன?

> ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏடு ஆகும்

> ரொக்கம் மற்றும் தள்ளுபடி என்ற இரு பத்திகள் இரண்டு பக்கங்களிலும் கொண்டுள்ளதால் இவை இரு பத்தி ரொக்க ஏடு ஆகும்

6. இருபத்தி ரொக்க ஏட்டின் படிவம் தருக.

ப — ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏடு — வ

நாள்	பெறுதல்கள்	இ. எ.	பே. ப. எ.	தொகை ₹		நாள்	செலுத்தல்கள்	சா. சீ. எ.	பே. ப. எ.	தொகை ₹	
				தள்ளுபடி	ரொக்கம்					தள்ளுபடி	ரொக்கம்

7. முப்பத்தி ரொக்க ஏடு என்றால் என்ன?

> ரொக்கம்,வங்கி மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏடு ஆகும்.

> ரொக்கம், வங்கி மற்றும் தள்ளுபடி என்ற மூன்று பத்திகள் இரண்டு பக்கங்களிலும் கொண்டுள்ளதால் இவை முப்பத்தி ரொக்க ஏடு ஆகும்.

8. ரொக்கத் தள்ளுபடி என்றால் என்ன?

> குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு முன் வாடிக்கையாளரிடமிருந்து தொகையை பெறும் நோக்குடன் வியாபாரியால் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் தள்ளுபடி ரொக்கத் தள்ளுபடி ஆகும்.

> கணக்கேடுகளில் ரொக்கத்தள்ளுபடி தனியாக காட்டப்படும்.

9. வியாபாரத் தள்ளுபடி என்றால் என்ன?

> விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்தில் வாங்குபவருக்கு விற்பவரால் வழங்கப்படும் தள்ளுபடி வியாபார தள்ளுபடி ஆகும்.

> வியாபார தள்ளுபடி இடாப்பில் விற்பனை மதிப்பிலிருந்து கழித்து காண்பிக்கப்படும்.

10. சில்லறை ரொக்க ஏடு என்றால் என்ன?

> சில்லறை ரொக்க ஏடு என்பது அடிக்கடி நிகழக்கூடிய சிறு செலவினங்களான வண்டிச்சத்தம், கூலி போன்றவற்றை பதியும் தனி ரொக்க ஏடு ஆகும்.

> சில்லறை காசாளர் சில்லறை ரொக்க ஏட்டினை பராமரிக்கிறார்.

III.குறுகிய வினாக்கள் (3 மதிப்பெண்)

1. சில்லறை ரொக்க ஏட்டில் முன் பண மீட்பு முறையின் பொருளை விளக்குக?

> குறிப்பிடப்பட்ட காலத்தில் செலவழிக்கப்பட்ட தொகையை சில்லறை காசாளர் திரும்ப பெறும் முறை முன் பண மீட்பு முறை ஆகும்.

> முன்பணம் என்பது கடனாகப் பெறப்படும் பணம் எனப் பொருள்படும். இம்முறையில் பல்வகையான சில்லறைச் செலவுகளுக்கான தொகை கணக்கிடப்பட்டு அத்தொகை சில்லறைக் காசாளரிடம் குறிப்பிடப்பட்ட காலத்தின் தொடக்கத்தில் வழங்கப்படும். குறிப்பிடப்பட்ட காலம் என்பது ஒரு மாதமாக இருந்தால், ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும் தொகை சில்லறைக் காசாளரிடம் வழங்கப்படும்.

2. ரொக்கத் தள்ளுபடிக்கும், வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக?

அடிப்படை	ரொக்கத் தள்ளுபடி	வியாபாரத் தள்ளுபடி
1.நோக்கம்	பொருளை வாங்கியவர் ரொக்கத்தை முன் கூட்டிச் செலுத்துவதை ஊக்குவிக்க வழங்கப் படுகிறது.	பொருளை வாங்குபவர் அதிகப்படியான பொருட்களை வாங்க வழங்கப் படுகிறது.
2.வழங்கப்படும் காலம்	கடனாளி / கடனீந்தோருக்கு தொகையைத் திரும்பச் செலுத்தும் போது	விற்பனை செய்யும்போதே வழங்கப் படுகிறது.
3.தள்ளுபடி தொகை	கடனை திரும்ப செலுத்தும் காலத்தை அடிப்படையாக கொண்டு	பொருட்கள் வாங்கிய அளவினை அடிப்படையாக கொண்டு
4.கணக்கேடுகளில் பதிவு செய்தல்	ரொக்கத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது	வியாபாரத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுவதில்லை
5.இடாப்பு மதிப்பில் கழித்து காட்டுதல்	ரொக்கத் தள்ளுபடி சரக்கின் இடாப்பு மதிப்பிலிருந்து கழித்து காட்டப்பட மாட்டாது.	வியாபாரத் தள்ளுபடி சரக்கின் இடாப்பு மதிப்பிலிருந்து கழித்து காட்டப்படும்.

www.Padasalai.Net

3. சில்லறை ரொக்க ஏடு பராமரிப்பதால் உண்டாகும் நன்மைகளை எழுதுக.

> செலவினங்களை நல்ல முறையில் கட்டுப்படுத்த முடியும்.

> முதன்மை காசாளரின் நேரம் மிச்சப்படுகிறது.

> சிறு செலவினங்களால் ரொக்க ஏட்டில் அதிக சுமை இல்லாமல் இருக்கும்

> பேரேட்டில் எடுத்தெழுவது எளிமையாகிறது

4. ரொக்க ஏட்டில் தள்ளுபடியைப் பதிவு செய்வது பற்றி குறிப்பு வரைக.

> ரொக்க ஏட்டில் ரொக்கப் பத்திகள் வழக்கம் போல இருப்புக் கட்டப்பட்டு அது அடுத்த நாள் அல்லது காலத்திற்குஎடுத்துச் செல்லப்படும்.

> ஆனால் தள்ளுபடி பத்திகள் இருப்புக்கட்டப்பட்டமாட்டாது. அவைகள் பற்றுப் பக்கம் தனியாகவும் மற்றும் வரவுப் பக்கம் தனியாகவும் கூட்டப்பட வேண்டும்.

> பற்றுப் பக்கத்தில் உள்ள தள்ளுபடி பத்தியின் மொத்தம் வாடிக்கையாளர்களுக்கு அளித்த தள்ளுபடியைக் காட்டுகிறது. இத்தொகை அளித்த தள்ளுபடி கணக்கில் பற்று செய்யப்பட்ட வேண்டும்,

> வரவுப் பக்கத்தில் உள்ள தள்ளுபடியின் மொத்தம் பெற்ற தள்ளுபடியைக் காட்டுகிறது. இத்தொகை பெற்ற தள்ளுபடி கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

5. எதிர்ப் பதிவை உதாரணத்துடன் விளக்குக.

> ஒரு பதிவு ரொக்க கணக்கு மற்றும் வங்கி கணக்கு இரண்டையும் பாதித்தால் அது எதிர் பதிவு ஆகும்

> எதிர்பதிவின் போது ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவு தன்மைகள் ரொக்க ஏட்டிலேயே பதியப்படுகின்றன்

உதாரணம்:

அ. வங்கியில் செலுத்தியது ரூ 10,000

ஆ வங்கியிலிருந்து எடுத்தது ரூ 15,000

www.Padasalai.Net

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

அலகு 8

வங்கிச் சரிகட்டும் பட்டியல்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் (1 மதிப்பெண்)

1. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிக்கப்படுவது.

(அ) வங்கியரால்

(ஆ) வணிகத்தால்

(இ) வணிகத்தின் கடனாளிகளால்

(ஈ) வணிகத்தின் கடனீந்தோரால்

2. வங்கிச்சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது

(அ) வங்கி அறிக்கை

(ஆ) ரொக்க ஏடு

(இ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி

(ஈ) சில்லறை ரொக்க ஏடு

3. ரொக்க ஏட்டின் வங்கிப்பத்தியின் பற்றிருப்பு என்பது

(அ) வங்கி அறிக்கையின் படி வரவிருப்பு

(ஆ) வங்கி அறிக்கையின் படி பற்றிருப்பு

(இ) ரொக்க ஏட்டின் படி மேல்வரைப்பற்று

(ஈ) மேற்கூறிய ஏதுமில்லை

4. வங்கி அறிக்கை என்பது

(அ) ரொக்க ஏட்டின் ரொக்கப் பத்தியின் நகல்

(ஆ) ரொக்க ஏட்டின் வங்கிப்பத்தியின் நகல்

(இ) வங்கி புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல்

(ஈ) வணிகத்தால் விடுக்கப்பட்ட காசோலையின் நகல்

5. எந்த வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிய வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

(அ) ரொக்க ஏட்டின் படி ரொக்கப் பத்தியின் இருப்பு மற்றும் ரொக்க ஏட்டின் படி வங்கிப்பத்தியின் இருப்புக்கும் இடையேயான வேறுபாடு

(ஆ) ரொக்க ஏட்டின் படி ரொக்கப்பத்தியின் இருப்பு மற்றும் வங்கி அறிக்கை இருப்புக்கும் இடையேயான வேறுபாடு

(இ) ரொக்க ஏட்டின் படி வங்கிப்பத்தியின் இருப்பு மற்றும் வங்கி அறிக்கை இருப்புக்கும் இடையேயான வேறுபாடு

(ஈ) சில்லறை ரொக்க ஏட்டின் இருப்பு மற்றும் ரொக்க ஏட்டின் இருப்புக்கும் இடையேயான வேறுபாடு

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

6. வங்கியிலிருந்து பணம் எடுக்கும்போது வங்கியானது.

(அ) வாடிக்கையாளர் கணக்கில் வரவு செய்யும்

(ஆ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று செய்யும்

(இ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று மற்றும் வரவு செய்யும்

(ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

7. பின்வருபவற்றில் எது வங்கிச் சரிகட்டும் பட்டியலின் சிறப்பியல்பு அல்ல.

(அ) காசோலை தீர்வடைவதில் ஏற்படும் கால தாமதத்தை சரிகட்டும் பட்டியல் காண்பிக்கும்

(ஆ) சரிகட்டும் பட்டியல் கணக்காளர் ரொக்கத்தை கையாளும் போது செய்யக்கூடிய மோசடிகளை தடுக்கிறது.

(இ) வங்கி இருப்பின் உண்மையான நிலையை அறிய பயன்படுகிறது.

(ஈ) சரிகட்டும் பட்டியல் கணக்காண்டின் இறுதியில் மட்டுமே தயாரிக்கப்படுகிறது

8. ரொக்க ஏட்டின்படி இருப்பு ரூ.2,000/- வங்கியால் பற்று செய்யப்பட்ட வங்கிக் கட்டணம் ரூ.50/- ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை எனில் வங்கி அறிக்கையின் படி இருப்பு என்ன?

(அ) ரூ.1,950 வரவு இருப்பு (ஆ) ரூ.1,950 பற்று இருப்பு

(இ) ரூ.2,050 பற்று இருப்பு (ஈ) ரூ.2,050 வரவு இருப்பு

9. வங்கி அறிக்கையின் படி இருப்பு ரூ.1,000/-. செலுத்திய காசோலை வங்கியால் இன்னும் வரவு வைக்கப்படாதது ரூ.2,000/-. ரொக்க ஏட்டில் வங்கிப்பத்தியின் இருப்பு எவ்வளவு?

(அ) ரூ.3,000 மேல்வரைப்பற்று ***(ஆ) ரூ.3,000 சாதகமான இருப்பு***

(இ) ரூ.1,000 மேல்வரைப்பற்று (ஈ) ரூ.1,000 சாதகமான இருப்பு

10, பின்வருவனவற்றில் எது காலத்தினால் ஏற்படும் வேறுபாடு அல்ல?

(அ) செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது.

(ஆ) விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது

(இ) வங்கியில் நேரடியாகச் செலுத்திய தொகை

(ஈ) ரொக்க ஏட்டில் தவறுதலாக பற்று வைத்தது

II.மிகக் குறுகிய வினாக்கள் (2 மதிப்பெண்)

1, வங்கி மேல்வரைப்பற்று என்றால் என்ன?

> வங்கி கணக்கில் உண்மையான இருப்புக்கு மேல் எடுப்பு செய்யும் போது காண்பிக்கும் இருப்பு வங்கி மேல்வரை பற்று ஆகும்

> அதிகப்படியாக எடுத்த தொகைக்கு பயன்படுத்திய நாள் வரை மட்டும் வட்டி கணக்கிடப்படுகிறது

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

2. வங்கிச் சரிகட்டும் பட்டியல் என்றால் என்ன?

வங்கி சரிகட்டும் பட்டியல் என்பது ரொக்க ஏட்டின் வங்கி இருப்புக்கும் செல்லேட்டின் வங்கி இருப்புக்கும் உள்ள வேறுபாட்டு இனங்களை வரிசைப்படுத்தும் ஒரு அறிக்கை ஆகும்

3. ரொக்க ஏட்டின் வங்கிப்பத்திக்கும் வங்கி அறிக்கைக்கும் இடையேயான வேறுபாட்டிற்கான காரணங்களில் ஏதேனும் இரண்டை கூறுக

> கால இடைவெளை வேறுபாடு ஒரே மாதிரியான இனங்களை பல்வேறு காலக் கட்டங்களில் பதிவு செய்வது

> பதிவு செய்வதில் ஏற்படும் தவறுகள் தவறாக பதிவு செய்வதால் ஏற்படும் வேறுபாடுகள்

4. நிலை அறிவுறுத்தலின்படி வங்கியால் செலுத்தப்பெறும் ஏதேனும் இரண்டு செலவுகளை தருக

> வங்கி செலுத்திய காப்பீடு முனைமம்

> வங்கி செலுத்திய தவணை தொகை

> வங்கி செலுத்திய தொலைப்பேசி கட்டணம்

5, கீழ்கண்ட வாக்கியத்திற்கு ஒரு வார்த்தையில் விடை தருக

(அ) வங்கியால் அளிக்கப்படும் வாடிக்கையாளர் கணக்கின் நகல்

- செல்லேடு (அ) வங்கிப் புத்தகம்

(ஆ) வங்கி அறிக்கையின் படி பற்றிருப்பு

- வங்கி மேல்வரை பற்று

(இ) ரொக்க ஏட்டின் படி இருப்பு மற்றும் வங்கி அறிக்கையின் படி இருப்பு வேறுபடுவதற்கான காரணங்களை பட்டியலிடும் அறிக்கை

- வங்கி சரிகட்டும் பட்டியல்

6, பின்வரும் வாக்கியங்களங்களை ஏற்றுக்கொள்கிறாயா? ஏற்றுக் கொண்டால் 'ஆம்' எனவும், ஏற்றுக்கொள்ளாவிட்டால் இல்லை' எனவும் பதிலளிக்கவும்

(அ) வங்கிச் சரிகட்டும் பட்டியல் வங்கியரால் தயாரிக்கப்படுகிறது.

- இல்லை

(ஆ) வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கு முன்னர் ரொக்க ஏட்டினை சரிகட்டுவது கட்டாயமானது.

- இல்லை

(இ) வங்கி அறிக்கையின் படி வரவிருப்பு என்பது மேல் வரைப் பற்றாகும்

- இல்லை

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

(ஈ) வங்கியால் பற்று செய்யப்படும் வங்கிக் கட்டணம் வங்கி அறிக்கையின் படியான இருப்பினை அதிகரிக்கச் செய்யும்.

- இல்லை

(உ) ரொக்க ஏட்டின் வங்கிப்பத்திக்கும் ரொக்க ஏட்டின் ரொக்கப்பத்திக்கும் இடையேயான வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிய தயாரிக்கப்படுவதே வங்கி சரிக்கட்டும் பட்டியல் ஆகும்

- இல்லை

III.குறுகிய வினாக்கள் (3 மதிப்பெண்)

1. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கான மூன்று காரணங்களைத் தருக?

> காசோலைகள் தீர்வடைவதில் ஏற்படும் கால தாமதத்தை கண்டறிதல்

> ரொக்க ஏட்டின் வங்கி பத்தியின் சரியான இருப்பினை கணக்கிடல்

> வணிகத்தின் கணக்காளர்கள் மற்றும் வங்கி, நிதியினை தவறாக பயன்படுத்துவதை தடுத்தல்

2. காசோலை இன்னும் முன்னிலைப்படுத்தவில்லை' என்பதன் பொருள் என்ன?

காசோலை வாடிக்கையாளரிடமிருந்து பெற்ற பின்பு அதே நாளில் வங்கியில் செலுத்தப்படாமல் வேறு ஒரு நாளில் வங்கியில் செலுத்துவது காசோலை இன்னும் முன்னிலைப்படுத்தவில்லை என்பதாகும்

3. வங்கியில் ரொக்க செலுத்தும்போது ரொக்க ஏட்டில் பற்றும் வங்கி அறிக்கையில் வரவும் வைக்கப்படுவது ஏன்? விளக்குக?

> வங்கியில் செலுத்தும் ரொக்கம் வணிகரின் பார்வையில் சொத்து, எனவே ரொக்க ஏட்டில் வங்கி பத்தியில் பற்று வைக்கிறோம்

> மேலும் ரொக்க ஏட்டினை பராமரிப்பது வணிகர் ஆவார்

> வங்கியில் செலுத்தும் ரொக்கம் வங்கியின் பார்வையில் பொறுப்பு எனவே வங்கி நமது கணக்கில் வரவு வைக்கிறது

> மேலும் நமது வங்கி கணக்கை பராமரித்து வங்கி அறிக்கையாக அளிப்பவர் வங்கியர் ஆவார்

4. மேல்வரைப்பற்று இருப்பாக இருந்தால் வங்கி வசூலித்த வட்டி ஏற்படுத்தும் விளைவு என்ன?

> மேல்வரைப்பற்று இருப்பாக இருந்தால் வங்கி வசூலித்த வட்டி ஏற்படுத்தும் விளைவு மேல்வரைப்பற்று தொகை குறையும்.

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

> ரொக்க ஏடு காட்டும் மேல்வரைப்பற்று இருப்பிலிருந்து வங்கி வசூலித்த வட்டியை கழித்து காட்ட வேண்டும்.

5. வங்கிச் சரிகட்டும் பட்டியலில் கால இடைவெளிகளால் ஏற்படும் வேறுபாடுகளை எடுத்துக்காட்டுடன் தருக.

கால இடைவெளை வேறுபாடு ஒரே மாதிரியான இனங்களை பல்வேறு காலக் கட்டங்களில் பதிவு செய்வது

உதாரணம்:

1. வாடிக்கையாளர் நமது கணக்கில் நேரடியாக செலுத்தியது
2. வங்கி பற்று வைத்த மேல்வரைப்பற்று மீதான வட்டி
3. வங்கியில் வைப்பு செய்த காசோலை வசூலித்து வரவு வைக்கப்படாதது
4, வங்கி வசூல் செய்த வட்டி மற்றும் பங்காதாயம்
5, விடுத்த காசோலை வங்கியில் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது

www.Padasalai.Net

Khader.M M.Com., B.Ed., M.Phil., P.G.Asst., in Commerce, GHSS - Brammakundam, Villupuram Dist., Mobile.94863 35786

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html